எதிர்காலத்தில் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்னை மாநகரம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் 52 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இன்னும் தேவையான இடங்களில் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 367, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

367—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***21280—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டத்திற்கென தனியாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலக நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் சுமார் 10 கி.மீ. தொலைவில் அவினாசி பகுதி அலுவலகம் இயங்கி வருகிறது. அவினாசி பகுதி அலுவலகத்தில் 2,557 போக்குவரத்து வாகனங்கள்

2014 ஆகஸ்ட் 7]

மட்டுமே உள்ளன. எனவே, அவினாசி பகுதி அலுவலகத்தினை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக நிலை உயர்த்த தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களை வணங்கி என் கேள்வியைத் தொடங்குகிறேன்.

கோவை மாவட்டம், அவினாசி தொகுதி, அன்னூர் தாலுகாவில் 26-6-2014 அன்று ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அரசுப் போக்குவரத்துப் பணிமனையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது திருக்கரங்களால் காணொலிக் காட்சிமூலம் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருப்பூர் மாவட்டம், அவினாசியில் ஒரு தீயணைப்பு நிலையமும் மற்றும் கோவை மாவட்டம் அன்னூரில் ஒரு தீயணைப்பு நிலையமும் தொடங்கப்படும் என அறிவித்தார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அவினாசி தொகுதி மக்களின் சார்பாகவும் எனது சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், அன்னூர் தாலுகாவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இல்லாததால் 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மேட்டுப்பாளையத்திற்குச் செல்ல வேண்டிய நிலை இருப்பதால், பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, அன்னூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகை எண்ணிக்கை, போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கை, வாகனப் பதிவு மற்றும் உரிமங்கள் தொடர்பாக பொதுமக்கள் மேற்கொள்ளும் பயண தூரம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு 5 சரக அலுவலகங்கள், 18 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 22 பதிவு அலுவலகங்கள், 2 சோதனைச் சாவடிகள், என மொத்தம் 47 புதிய அலுவலகங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போக்குவரத்துத் துறைக்கு வழங்கி, புதிய வரலாற்றைப் படைத்துள்ளார்கள்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அவினாசி பகுதி அலுவலகத்தில் 2,557 போக்குவரத்து வாகனங்கள் மட்டுமே உள்ளன. அந்தப் பகுதி அலுவலகத்தினை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துவதற்கு குறைந்தபட்சம் 7 ஆயிரம் போக்குவரத்து வாகனங்கள் வேண்டும். வாகன எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அதற்கான உத்தரவினைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.*

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, வாகன வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட முளகுமூடு*

2014 ஆகஸ்ட் 7]

பேரூராட்சி பகுதியில் மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்படுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படுவதான பெயர்ப் பலகை வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பணி எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்த்தாண்டம் பகுதி அலுவலகத்திற்குப் பெயர்ப் பலகை வைக்கப்பட்டு இருப்பதாகச் சொன்னார். பெயர்ப் பலகை வைப்பது மட்டும் அல்ல; இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 47 புதிய அலுவலகங்களை வழங்கி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மூன்றாண்டுக்கால பொற்கால ஆட்சியில் சரக அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் என அறிவிக்கப்பட்டதில், 100 சதவிகிதம் முழுமையாக பணிகள் முடிக்கப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டிற்கு தங்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்திருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வில் இருக்கின்றது. விரைவாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரில் அதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதியில் மோட்டார் வாகன அலுவலகம் திறந்து, 7 வருடங்கள் ஆகின்றன. தருமபுரி மாவட்டத்தில் ஒரே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்தான் உள்ளது. பதிவு செய்யக்கூடிய அத்தனை*

வாகனங்களில் ஏறக்குறைய சரி பாதி அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய வட்டங்களை உள்ளடக்கிய அரூர் கோட்டத்திற்கு உட்பட்டது; ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மோட்டார் வாகன அலுவலகத்தைத் தரம் உயர்த்தி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகக் கொண்டுவருவார்களா என்பதையும், பாப்பிரெட்டிப்பட்டி பகுதியிலே புதியதாக வட்டார ஆய்வாளர் அலுவலகம் ஒன்று திறக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க வேண்டும் என்று சொன்னால், 2 ஏக்கர் இடம் தேவை. அதேபோல, 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி தேவைப்படுகிறது; 22 புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். வாகனங்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 7 ஆயிரமாக இருக்கின்றபோதுதான் அதைத் தரம் உயர்த்துவதற்கு ஏதுவாக அமையும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற இடத்தை ஆய்வு செய்து, வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். எங்களது கள்ளக்குறிச்சிப் பகுதியிலே உள்ள பகுதிநேர அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகின்றேன்.*

2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம், பகுதி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம், ஓட்டுநர் பயிற்சித் தளம் அமைப்பதற்கு என மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.34,73,42,000/- நிதியினை வழங்கி அவையனைத்தும் சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கு ஆணைகளை வழங்கி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 2 ஏக்கர் நிலம் தேவைப்படுகின்றது; 55 இலட்சம் ரூபாய் நிதி தேவைப்படுகிறது. இந்தக் கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 368, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

368—

குளிர்பதனக் கிடங்கு

***5513—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி மற்றும் பெண்ணாகரத்தில் வேளாண் விளைபொருட்களுக்கான குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,